FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(குற்ற நடைமுறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

C 8120354

1. District மாவட்டம் திருச்சி — PS காவல்நிலையம் பொ.தி.க.மாநகர — Year ஆண்டு 2025 — FIR No. முதல் அ எண் 04 — Date நாள் 02.05.2025

2. (i) Act சட்டம் மூழ்கல் தடுப்பு சட்டம், 1988 — Sections பிரிவுகள் 13(2) r/w 13(1)(a)
(ii) Act சட்டம் (திருத்தப்பட்டது - 2018) — Sections பிரிவுகள்
(iii) Act சட்டம் இந்திய தண்டனைச் சட்டம் — Sections பிரிவுகள் 167, 406, 420, 468, 471
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day
குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் 2020 ஆம் ஆண்டு — Date to நாள் வரை 2024 ஆம் ஆண்டு
Time Period
நேர அளவு
Time from நேரம் முதல்
Time to நேரம் வரை

(b) Information Received at PS Date
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.05.2025 — Time நேரம் 1400 hrs.

(c) General Diary Reference Entry No(s)
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time நேரம்

4. Type of Information Written/ Oral
தகவலின் வகை எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக (கணினி) தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 50 கி.மீ. தென் கிழக்கு

Beat Number
முறைக் காவல் எண்
(b) Address
முகவரி வளநாடு ஊராட்சி, திருச்சி மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அப்துல் ரஹ்மான்
(b) Father's/ Husband's Name
தந்தை / கணவர் பெயர் முஸ்தபா
(c) Date / Year of Birth
நாள் / பிறந்த ஆண்டு 15.3.90
(d) Nationality
நாட்டினம் இந்தியன்
(e) Passport No.
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue
வழங்கப்பட்ட நாள்
Place of Issue
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation
தொழில் இந்திய மஸ்தூர் சங்கம்
(g) Address
முகவரி 4/91, காவல்காரத் தெரு, வளநாடு மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வளநாடு ஊராட்சி, திருச்சி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

என்னை உயிர்நீதி மன்ற மதுரை கிளை நிர்ப்பான் பழ

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
M. Abdul Rahim 02/05/25

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
02/05/25

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 02.05.2025

Name: பெயர் ப.பாலமுருகன்
Rank: நிலை தலைமைக் காவலர் No. எண் .....
உ.ப.எ. மாடத்தி, திருச்சி.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2025–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி..

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.M.அப்துல் ரஹ்மான், த/பெ.முஸ்தபா, லால்பாட்சா தெரு, வளநாடு, மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த WP (MD) No.15021/2024-ல் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் கடந்த 25.10.2024ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்பில் திரு.M.அப்துல் ரஹ்மான் என்பவர் சென்னை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள், விஜிலென்ஸ் மற்றும் ஊழல் தடுப்புப்பிரிவு அவர்களுக்கு திருச்சி மாவட்டம், வளநாடு ஊராட்சியில் கடந்த 2020ஆம் ஆண்டு முதல் 2023–24ஆம் ஆண்டு வரை புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் புதிய பைப்லைன் அமைத்தல் பணிகளில் நடந்த முறைகேடுகள் தொடர்பாக கடந்த 27.05.2024 அன்று அனுப்பிய புகார் மனு மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்கும்படி பிறப்பித்த உத்தரவின் தொடர்ச்சியாக சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குனர் அவர்களின் நமூனா எண். Petn.No.6573/2024/RDP/TR (SA-16), நாள். 30.04.2025–ன்படி காலம்–7ல் கண்ட எதிரி திரு.வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வளநாடு ஊராட்சி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம் என்பவர் மீது இவ்வழக்கினை பதிவு செய்கிறேன். மேற்கண்ட எதிரி.திரு.வெங்கடேசன் என்பவர் கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் வளநாடு ஊராட்சி மன்ற தலைவராக பணிபுரிந்து வந்ததால், ஊழல் தடுப்பு சட்டம் 1988 (திருத்தப்பட்டது 2018) பிரிவு 2(c)-ன்படி பொது ஊழியர் ஆவார். திரு.M.அப்துல் ரஹ்மான், த/பெ.முஸ்தபா, லால்பாட்சா தெரு, வளநாடு, மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம் என்பவர் சென்னை, விஜிலென்ஸ் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு, காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனுவின் விபரம் பின்வருமாறு: 27.05.2024, அனுப்புநர் M.அப்துல் ரஹ்மான், த/பெ.முஸ்தபா, லால்பாட்சாதெரு, வளநாடு, மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம். செல்: 99435 21341 பெறுநர் உயர்திரு.காவல்துறை கண்காணிப்பாளர் அவர்கள், விஜிலென்ஸ் மற்றும் ஊழல் தடுப்புப் பிரிவு, சென்னை. பொருள்: மருங்காபுரி வட்டம், வளநாடு கிராமத்தில் சுமார் 50க்கும் மேற்பட்ட வேலைகள் செய்யாமல் செய்ததாக கூறி அரசு அதிகாரிகளை ஏமாற்றி சுமார் 90 இலட்சத்திற்கு மேல் கையாடல் செய்தும் திருட்டு வழக்கில் தொடர்புடைய வளநாடு ஊராட்சி மன்ற வெங்கடேசன் என்பவர் மீது நடவடிக்கை எடுப்பது தொடர்பாக, ****, ஐயா, வணக்கம், நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். எங்கள் ஊரில் ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் வெங்கடேசன் என்பவர் கடந்த 2020ம் ஆண்டிலிருந்து தற்போது வரை பல்வேறு விதமான முறைகேடுகள் செய்து வந்துள்ளார். அதனை தகவல் அறியும்

உரிமைச்சட்டத்தின் மூலம் கடந்த 03.07.2023ம் தேதியன்று பெறப்பட்டுள்ளது. அதில் பல புதிய போர்கள் போட்டதாகவும், புதிய பைப் லைன் அமைத்ததாகவும் கூறி மேற்படி வெங்கடேசன் என்பவர் கையாடல் செய்த விபரம் தெரிய வந்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு. வளநாடு ஊராட்சி வாடிப்பட்டியில், 1. 14வது நிதிக்குழு மானியத்தில் வாடிப்பட்டியில் புதிய ஆழ்குழாய் கிணறு, மின்மோட்டார், பைப் லைன் அமைத்தது என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. வளநாடு ஊராட்சி தோப்புப்பட்டியில், 1. 14வது நிதிக்குழு மானியத்தில் தோப்புப்பட்டியிலிருந்து வடக்கி களம் வரை புதிய பைப் லைன் அமைத்தல் என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. வளநாடு ஊராட்சி குறிஞ்சி நகரில், 1. 15வது நிதிக்குழு மானியத்தில் குறிச்சிநகரில் புதிய ஆழ்குழாய் கிணறு, மின்மோட்டார், பைப் லைன் அமைத்தல் என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மோட்டார் இணைப்பு மட்டுமே தற்பொழுது வரை இயங்கி கொண்டிருக்கிறது. வளநாடு ஊராட்சி பள்ளிவாசல் தெருவில், 1. 15வது நிதிக்குழு மானியத்தில் பள்ளிவாசல் தெருவில் புதிய ஆழ்குழாய் கிணறு, மின்மோட்டார், பைப் லைன் அமைத்தல் என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மோட்டார் இணைப்பு மட்டுமே தற்பொழுது வரை இயங்கி கொண்டிருக்கிறது. வளநாடு ஊராட்சி சிவன் கோயில் தெரு, 1. 15வது நிதிக்குழு மானியத்தில் வளநாடு அரசு மேல்நிலைப்பள்ளியிலிருந்து சிவன் கோயில் தெரு மற்றும் லால்பாட்சா தெரு வரை புதிய குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்பட்வில்லை. 2. 14வது நிதிக்குழு மானியத்தில் தேனூர் சாலை நிழற்குடையிலிருந்து அரசு மேல்நிலைப்பள்ளி வரை புதிய சாலை அமைத்தல் என தொகை பெறப்பட்டுள்ளது. ஆனால் எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட மோட்டார் இணைப்பு மட்டுமே நற்பொழுது வரை இயங்கி கொண்டிருக்கிறது. வளநாடு ஊராட்சி அழகாபுரி, 1. 14 மற்றும் 15வது நிதிக்குழுவிலிருந்து புதிய பைப் லைன் அமைத்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால்எவ்விதமான வேலையும் இங்கு செய்யப்படவில்லை. குறிப்பு: 1. புதிய பைப் லைன் அமைத்தல் என்பது மேற்படி ஊராட்சிமன்ற தலைவராக இருக்கும் வெங்கடேசன் என்பவர் கூற்றுப்படி பழைய இடத்தில் இருக்கும் போர் இருக்கும் சுவற்றில் வெறும் பெயின்ட் மட்டும் அடித்து அதில் திட்ட மதிப்பீடு விவரங்கள் மட்டும் எழுதி அதன் மூலம் பணத்தை மோசடி செய்வதை மட்டும் வாடிக்கையாக கொண்டுள்ளார். அதற்கு ஆதரவாக எங்களால் எடுக்கப்பட்ட போட்டோவும், தகவலறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலும் இத்துடன் இணைத்துள்ளேன். 2. மேற்படி ஊராட்சிமன்ற தலைவராக இருக்கும் வெங்கடேசன் என்பவர் வருடா வருடம் புதிய பைப்

லைன் அமைத்தல், புதிய போர் அமைத்தல் என பல்வேறு விதமான மோசடிகளையும் செய்து அதன் மூலம் சுமார் 90 இலட்சத்திற்கு மேல் கையாடல் செய்தது தெரிய வந்துள்ளது. 3. மேற்படி வெங்கடேசன் என்பவர் ஜாதி, மத மோதல்களை தூண்டும் எண்ணத்தோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். 4. கடந்த 20.04.2024ம் தேதியன்று சட்டத்திற்கு புறம்பாக நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான மரங்களை வெட்டியது சம்மந்தமாக அவர்மீது வளநாடு காவல்நிலையத்தில் புகார் அளித்து அந்த புகாரின் அடிப்படையில் வளநாடு காவல்துறையினர் குற்ற வழக்கு எண்: 56/2024 U/S 379 கீழ் திருட்டு வழக்கு போடப்பட்டுள்ளது. 5. வளநாடு ஊராட்சிமன்ற தலைவரை கண்டித்தும், முறைகேடுகளை கண்டித்தும் பலமுறை சாலை மறியல் ஊர்பொதுமக்கள் சார்பாக கடந்த 2023ம் ஆண்டும் மற்றும் கடந்த 08.04.2024ம் தேதியன்றும் நடைபெற்றது. 6. வளநாடு–தேனூர் சாலையில் அமைந்துள்ள கமால் வீட்டிற்கு முன்புறம் உள்ள மோட்டார் ரூமின் கிழக்கு பகுதியில் உள்ள சுவற்றில் கடந்த 27.07.2023ம் தேதியன்று எடுக்கப்பட்ட புகைப்படத்தில் 2 இலட்சம் மதிப்பிலான மோட்டார் இணைப்புகள் போடப்பட்டது என இருந்தது. ஆனால் தற்சமயம் 2023–2024 15வது நிதிக்குழு மானியத்தியலிருந்து புதிய ஆழ்குழாய் கிணறு மற்றும் பைப் லைன் அமைத்தல் மதிப்பீடு ரூ.3 இலட்சம் என அதே இடத்தில் போடப்பட்டு தொகையும் எடுக்கப்பட்டுள்ளது. 7. வளநாடு–தேனூர் சாலையில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி நுழைவாயில் அமைந்துள்ள போர் ஒன்று உள்ளது. அந்த போர் சுமார் 10 வருடங்களக்கு மேல் போடப்பட்ட போர் ஆகும். ஆனால் தற்பொழுது ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் என்பவர் அதனை பழுது பார்த்து 15வது நிதிக்குழு மானியத்திலிருந்து ரூ.3 இலட்சம் 2023–2024ம் ஆண்டு போட்டதாக தொகை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு எவ்விதமான வேலையும் செய்யவில்லை. ஆகவே, ஐயா அவர்கள் தயவு கூர்ந்து வளநாடு ஊராட்சி மன்ற தலைவராக இருக்கும் வெங்கடேசன் என்பவர் சுமார் 90 இலட்சத்திற்கு மேல் கையாடல் செய்தும் திருட்டு வழக்கில் தொடர்புடைய வளநாடு ஊராட்சி மன்ற வெங்கடேசன் என்பவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை எனது சார்பாகவும், வளநாடு ஊர்ப்பொதுமக்கள் சார்பாகவும் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd.xxxx 27/05/2024 இணைப்பு: 1. வளநாடு காவல் நிலையத்தில் வெங்கடேசன் என்பவர் மீது போடப்பட்ட திருட்டு வழக்கின் FIR நகல். 2. RTI நகல். சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் திரு.M.அப்துல் ரஹ்மான், த/பெ.முஸ்தபா, லால்பாட்சா தெரு, வளநாடு, மருங்காபுரி வட்டம், திருச்சி மாவட்டம் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த WP (MD) No.15021/2024-ல் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் கடந்த 25.10.2024ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்பின்படி மேற்படி புகார் மனுவினை கொண்டு, இன்று 02.05.2025ஆம் தேதி 14.00 மணிக்கு திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.04/2025, இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 167, 406, 420, 468, 471 மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 (திருத்தம் –2018) பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(a)

–ன்படி எதிரி திரு.வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், வளநாடு ஊராட்சி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், திருச்சி மாவட்டம் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், புகாரின் நகல் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP (MD) No.15021/2024–ல் மாண்புமிகு நீதியரசர் அவர்கள் கடந்த 25.10.2024ஆம் தேதியன்று வழங்கிய தீர்ப்பின் நகல் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்களுக்கும் மற்றும் அதன் நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

Inspector of Police,
VB&AC, Trichy.